# (29) தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்

## வினாத்தாள் கட்டமைப்பு

**வினாத்தாள் I** **:- நேரம் 02 மணித்தியாலங்கள்**

**5** தெரிவுகளைக் கொண்ட **50** பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. **எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவற்கு **01** புள்ளி வீதம் **50** புள்ளிகள் வழங்கப்படும்.

**வினாத்தாள் II** **:- நேரம் 03 மணித்தியாலங்கள்** (மேலதிக வாசிப்பு நேரம் **10** நிமிடங்கள் )

**ஏழு** கட்டமைப்பு கட்டுரை வகை வினாக்களைக் கொண்டது. **ஐந்து** வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவற்கு **40** புள்ளிகள் வீதம் **200** புள்ளிகள் வழங்கப்படும்.

வினாத்தாள் II இற்கான மொத்தப்புள்ளிகள் = 05 × 40 = 200

இறுதிப் புள்ளிகளைக் கணித்தல் :-

| | | |
|---|---|---|
| வினாத்தாள் I | | = 50 |
| வினாத்தாள் II | = 200 ÷ 4 | = 50 |
| இறுதிப் புள்ளி | | = 100 |

## வினாத்தாள் I

01. தொடர்பாடுநர் மற்றும் பெறுநருக்கு இடையிலான வகிபாகம் பரிமாற்றம் பெறுவதைக் காட்டும் மாதிரி எது?
(1) ஹரோல்ட் டி லாஸ்வெல் மாதிரி. (2) ஷ்ராம்-ஒஸ்குட் மாதிரி. (3) HUB மாதிரி.
(4) அரிஸ்டோட்டில் மாதிரி. (5) ஷெனொன் வீவர் மாதிரி.

02. "தொடர்பாடல் என்பது ஒருபோதும் தனித்திராத மாற்றத்திற்கு உட்படக்கூடிய ஒன்றாகும்." இக் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுவது தொடர்பாடல்,
(1) ஒரு வழி மற்றும் இரு வழிப்போக்கானது என்பதாகும்.
(2) ஒரு சக்தி என்பதாகும்.
(3) ஒரு செயன்முறை என்பதாகும்.
(4) சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு இயைவானது என்பதாகும்.
(5) குறியீட்டுப் பாவனையுடையது என்பதாகும்.

03. தகவல் மூலத்தைத் தெளிவாக இனங்காண **முடியாத** தொடர்பாடல் வடிவமாக அமைவது,
(1) வாய்மொழித் தொடர்பாடலாகும்.
(2) முறைசார் தொடர்பாடலாகும்.
(3) முறைசாராத் தொடர்பாடலாகும்.
(4) வாய்மொழியற்ற தொடர்பாடலாகும்.
(5) பேச்சுத் தொடர்பாடலாகும்.

04. ஆசிரியர் வகுப்பறைக்குள் வந்து பாடநூலின் பக்கங்களைப் புரட்டிய கணத்தில் வீதியில் சென்றுகொண்டிருந்த வாகனமொன்றின் சைரன் ஒலியைச் செவிமடுத்ததனால் மாணவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். இம் முழு நிகழ்வுகளிலும் முக்கியமாகக் காணப்படுவது,
(1) முறைசாராத் தொடர்பாடலாகும். (2) தொடர்பாடல் தடையாகும்.
(3) ஆளுள் தொடர்பாடலாகும். (4) வாய்மொழியற்ற தொடர்பாடலாகும்.
(5) ஒலித் தொடர்பாடலாகும்.

05. பாடசாலை மைதானத்தில் மயக்கமடைந்த மாணவரொருவருக்கு முதலுதவி வழங்கிய மாணவர் தலைவர், தான் வாசித்திருந்த புத்தகங்கள் மூலம் பெற்றுக்கொண்ட விளக்கங்கள் மற்றும் முதலுதவி வழங்கும் முறை பற்றித் தான் அவதானித்திருந்த விடயங்கள் ஆகியன இதன்போது தனக்கு உதவின என்று கூறினார். இவ் விடயம் அடங்கும் தொடர்பாடல் மூலக்கூறாவது,
(1) குறிமுறையாக்கம் ஆகும். (2) குறிமுறையவிழ்ப்பு ஆகும்.
(3) பின்னூட்டம் ஆகும். (4) அனுபவக் களம் ஆகும்.
(5) தகவல் பெறுகை ஆகும்.

06. ஒரே நாளில் ஒரே நேரத்தில் நாடு தழுவிய ரீதியில் மர நடுகை நிகழ்வொன்றை நடாத்துவது தொடர்பில் மக்களை அறிவூட்டுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய வினைத்திறனான தொடர்பாடல் வகை எது?
(1) மெய்நிகர் தொடர்பாடல். (2) ஆளிடைத் தொடர்பாடல்.
(3) குழுத் தொடர்பாடல். (4) பொதுசனத் தொடர்பாடல்.
(5) வெகுசனத் தொடர்பாடல்.

07. "தனி உலகப் பண்பாடு" ஒன்றை உருவாக்குவது தொடர்பில் செயற்படும் எண்ணக்கருவாக அமைவது,
(1) வணிகமயப்படுத்தல் ஆகும். (2) ஊடகக் குவிகை ஆகும்.
(3) பண்டமயமாக்கல் ஆகும். (4) பூகோளமயமாக்கல் ஆகும்.
(5) சிறுகூறுகளாக்குதல் ஆகும்.

08. சினிமா மற்றும் தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பின் அடிப்படையாக அமைவது,
(1) மூலாதாரம் ஆகும். (2) திரைக்கதை ஆகும். (3) நடிப்பு ஆகும்.
(4) இயக்கம் ஆகும். (5) ஒப்பனை ஆகும்.

09. சமூக அறிவைப் பெற்றுத்தருதலோடு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடந்துகொள்ளும் விதம் தொடர்பாக அறிவூட்டும் ஊடகச் செயற்பாடு உள்ளடங்குவது,
(1) சுய எண்ணக்கருவிலாகும். (2) மேற்பார்வையிலாகும். (3) சமூகமயமாக்கலிலாகும்.
(4) அறிவாற்றலிலாகும். (5) விளங்கறிவிலாகும்.

10. மானுடத் தொடர்பாடலில் எண்ணங்கள், குறியீடுகள் ஆகியவற்றின் துணையுடன் தகவலாகப் பரிவர்த்தனை செய்யப்படும் செயன்முறை இனங்காணப்படுவது,
(1) பின்னூட்டம் என்று. (2) குறிமுறையவிழ்ப்பு என்று. (3) குறிமுறையாக்கம் என்று.
(4) குவிகை என்று. (5) விஸ்தீரணம் என்று.

11. வெகுசன ஊடக நிறுவனங்கள் ஒரு சில விடயங்கள் தொடர்பில் அதிகளவு அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றன. இது HUB மாதிரியில் குறிப்பிடப்படுவது,
(1) வடிகட்டிகள் மூலமாக. (2) தாக்கம் மூலமாக. (3) ஊடக விஸ்தீரணம் மூலமாக.
(4) பின்னூட்டம் மூலமாக. (5) வாயிற்காப்பாளர் மூலமாக.

12. அபிவிருத்திக்கான தொடர்பாடல் பயன்பாட்டின்போது **பொருத்தமில்லாத** கூற்று எது?
(1) கலந்துரையாடல்கள் செயற்றிறன்மிக்கதாகக் காணப்படும்.
(2) தொடர்பாடல் ஒருவழிப்போக்கானதாக நிகழும்.
(3) பரந்த அளவில் கருவிகள் மற்றும் முறைகள் பயன்படுத்தப்படும்.
(4) முடிவுகளை எடுக்கும்போது பிரஜைகள் பங்குபற்றுவர்.
(5) கலந்துரையாடல்கள், வாத விவாதங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.

13. கீழே தரப்படுவன தொடர்பாடலின் சில பண்புகள் ஆகும்.
A - ஆழ்பரிவு B - பல்வகையான பெறுநர்கள் C - சுய எண்ணக்கரு D - வெளிச்சவீட்டு முறை
மேற்காணும் பண்புகள் பொருந்தும் தொடர்பாடல் வகைகள் ஒழுங்குமுறையே,
(1) ஆளுள், வெகுசன, ஆளிடை மற்றும் குழுத் தொடர்பாடல் ஆகும்.
(2) ஆளுள், ஆளிடை, குழு மற்றும் வெகுசனத் தொடர்பாடல் ஆகும்.
(3) ஆளிடை, வெகுசன, ஆளுள் மற்றும் குழுத் தொடர்பாடல் ஆகும்.
(4) குழு, ஆளிடை, ஆளுள் மற்றும் வெகுசனத் தொடர்பாடல் ஆகும்.
(5) வெகுசன, குழு, ஆளுள் மற்றும் ஆளிடைத் தொடர்பாடல் ஆகும்.

14. அரிஸ்டோட்டில் மற்றும் ஹரோல்ட் டி லாஸ்வெல் மாதிரிகளுக்கிடையிலான சமமின்மையினை வெளிப்படுத்தும் கூற்று எது?
(1) தொடர்பாடுநர், தகவல் மற்றும் பெறுநர் உள்ளடங்கிய மாதிரிகளாகும்.
(2) ஒருவழித் தொடர்பாடல் மாதிரிகள் ஆகும்.
(3) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறை விபரிக்கப்படும்.
(4) பின்னூட்டம் மற்றும் தடை குறிப்பிடப்படவில்லை.
(5) தாக்கம் தொடர்பில் அவதானம் வழங்கப்பட்டுள்ளது.

15. நிறுவனமொன்றில் ஊடக அதிகாரியின் பணிகளுடன் குறைந்தளவிலான தொடர்பைக் காட்டுவது,
(1) நிறுவனம் பற்றிய விமர்சனங்களுக்குப் பதில் அளித்தல்.
(2) மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தல்.
(3) மேம்பாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடுசெய்தல்.
(4) நிதி முகாமைத்துவத்திற்கு அறிவுரை வழங்குதல்.
(5) புகழ் நாமம் பற்றி கவனமெடுத்தல்.

16. கொரோனா தொற்றுநோய் பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சீனாவில் தயாரிக்கப்பட்ட விவரணப்படமொன்று இலங்கையிலும் அந்நோய் பரவிய பகுதிகளில் திரையிடப்பட்டது. இது மிகவும் முக்கியமானதாக இருப்பது ஏனெனில்,
(1) கொரோனா தொற்றுநோய் பற்றிய தகவல் முதலில் அறிக்கையிடப்பட்டது சீனாவில் என்பதால் ஆகும்.
(2) காட்சி ஊடகம் அதிகம் வலுவானது என்பதாலாகும்.
(3) இது கூட்டுத் தொடர்பாடல் செயற்பாடு என்பதாலாகும்.
(4) இது ஒத்த அனுபவப் பரப்பு பற்றிய தகவல்களைத் தருவதாலாகும்.
(5) இது பண்பாட்டு இடைத்தொடர்புகளைக் கட்டியெழுப்புவதனாலாகும்.

17. தொடர்பாடல் ஆய்வு ஒன்றின்போது தரவுகளைத் திரட்டுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய இரு பிரதான முறைகளாவன,
(1) வினாக்கொத்து மற்றும் நேர்முகக் கலந்துரையாடல் முறை என்பனவாகும்.
(2) நேர்முகக் கலந்துரையாடல் மற்றும் அவதானித்தல் முறை என்பனவாகும்.
(3) பங்குபற்றல் அவதானிப்பு மற்றும் வினாக்கொத்து முறை என்பனவாகும்.
(4) சிந்தனைக் கிளர்வு மற்றும் நேர்முகக் கலந்துரையாடல் முறை என்பனவாகும்.
(5) அவதானித்தல் மற்றும் பங்குபற்றல் அவதானிப்பு முறை என்பனவாகும்.

18. ஒரே வகுப்பில் கல்வி கற்ற நண்பர்கள் குழாத்தினர் பரீட்சையில் சித்தியெய்தியதன் பின்னர் புலமைப் பரிசில் பெற்று வெளிநாடு சென்றுவிட்டனர். அவர்கள் நவீன தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தித் தகவல் பரிமாற்றிக்கொண்டனர். அத் தகவல் பரிமாற்றம் நிகழ்ந்தது,
A - கருவித் துணையுடன் கூடிய மற்றும் குழுத் தொடர்பாடலினாலாகும்.
B - மெய்நிகர் மற்றும் தொழினுட்பத் தொடர்பாடலினாலாகும்.
C - கருவித் துணையுடன் கூடிய மற்றும் மெய்நிகர் தொடர்பாடலினாலாகும்.
D - கருவித் துணையுடன் கூடிய மற்றும் தொழினுட்பத் தொடர்பாடலினாலாகும்.
மேற்காணும் கூற்றுகளில் உண்மையானவை
(1) A, B என்பனவாகும். (2) A, C என்பனவாகும். (3) B, C என்பனவாகும்.
(4) C, D என்பனவாகும். (5) A, B, C, D என்பனவாகும்.

19. பேராசிரியர் பிலிப் கொட்லரினால் முன்வைக்கப்பட்ட நிகழ்வு வகைப்படுத்தலுக்குள் **அடங்காத** விடயமாக அமைவது,
(1) சமூக மற்றும் வாழ்வியல் நிகழ்வுகள். (2) அரசியல் நிகழ்வுகள்.
(3) கல்வி மற்றும் தொழில்சார் நிகழ்வுகள். (4) சுற்றாடல் நிகழ்வுகள். (5) ஆன்மீக நிகழ்வுகள்.

20. சுயதணிக்கைக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்ட தணிக்கை நிறுவனம் எது?
(1) பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை.
(2) இலங்கைப் பத்திரிகைப் பேரவை.
(3) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு.
(4) இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு.
(5) இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையம்.

21. இணையத்தின் ஊடாக டிஜிடல் நூலகத்திற்குள் நுழைந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் உங்களுக்கு உள்ளதென எண்ணுங்கள். இதற்காகத் தேவைப்படும் காரணி எது?
(1) தரவுத்தளம் (Data base) (2) இடைத்தொடர்பு (Interactivity)
(3) தானியங்கி (Automation) (4) வலையமைப்பு (Networking)
(5) அதிவேகச் செய்தியனுப்புகை (Fastest Messaging)

22. பண்பாடு என்பது,
A - மனித அனுபவங்கள், பழக்கங்கள் மற்றும் ஆற்றல்களின் இணைவு ஆகும்.
B - வெகுசன ஊடகங்கள் மூலமாகக் கற்பிக்கப்படும் மதிப்பீடுகளின் இணைவு ஆகும்.
C - சமூகத்தை ஒன்றாக இணைக்கும் பெறுதிகளைக் கொண்டதாகும்.
D - மனிதத் தொடர்புகளினால் உருவாகி விருத்தி பெற்றதாகும்.
மேற்காணும் கூற்றுகளில் மிகச் சரியானவை,
(1) A, B ஆகியன மாத்திரம். (2) A, D ஆகியன மாத்திரம். (3) A, B, C ஆகியன மாத்திரம்.
(4) A, C, D ஆகியன மாத்திரம். (5) B, C, D ஆகியன மாத்திரம்.

23. எந்தவொரு நிறுவனத்திற்கும் அல்லது அமைப்பிற்கும் பொதுசனத் தொடர்பு அவசியமாக அமைவது,
(1) நிறுவனத்தின் புகழ் நாமத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு.
(2) முறைசார் தொடர்பாடல் வழிமுறையின் பயன்பாட்டிற்கு.
(3) நிறுவனம் அல்லது அமைப்பின் இலாபத்தை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு.
(4) நிறுவனத்தின் இலாபத்தை அதிகரிப்பதற்கு.
(5) ஏனைய நிறுவனங்களுடன் போட்டி நிலைமையினை உருவாக்குவதற்கு.

24. பாரம்பரியத் தொடர்பாடல் விதிமுறையாக நாட்டார் நாடகங்களைப் பற்றிக் குறிப்பிடும் **தவறான** கூற்று எது?
(1) கண்ணுக்குப் புலப்படாத பொருட்களை அழைத்தல் மற்றும் அவற்றின் மூலம் உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.
(2) ஏதேனும் கதை ஒன்று நாட்டார் நாடகங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்படும்.
(3) பிரதேசங்களுக்கு ஏற்ப நாட்டார் நாடகங்களில் பல்வகைமை காணப்படும்.
(4) பாடல் பாடுதல், உரையாடல் என்பன பயன்படுத்தப்படும்.
(5) நடிப்புக்குத் தேவையான பொருட்கள் சூழலிலிருந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

25. 1982 இல் யுனெஸ்கோ அமைப்பு குரூன்வெல்ட் பிரகடனம் மூலம் ஊடகக் கற்கைகள் பற்றி வரையறுத்தது,
(1) ஊடக விளங்கறிவு, விமர்சனரீதியாக ஊடக நுகர்வு மற்றும் படைப்பாக்கரீதியான சிந்தனையை சிறுவர்களிடத்தே உருவாக்குதல் எனவாகும்.
(2) வெகுசன ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி மனிதர்களிடத்தே புரிதலை ஏற்படுத்துதல் எனவாகும்.
(3) தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சி சமூகத்தில் செலுத்தும் தாக்கத்தின் இயல்பை விளக்குதல் எனவாகும்.
(4) முறிவடைந்த உளவியல் நிலைமைகளைக் குறிவைத்து ஊடகம் மூலமாக எளிய மகிழ்வூட்டலை வழங்குதல் எனவாகும்.
(5) அபிவிருத்திசார் மற்றும் ஜனநாயக சிந்தனையுடன் கூடிய பிரஜையை உருவாக்குதல் எனவாகும்.

26. மெய்மை நிகழ்ச்சியொன்று பற்றிய பெறுநரது துலங்கல் எவ்வாறானது என்பது பற்றி அறிந்துகொள்வதற்கு நிமாலிற்கு அவசியம் ஏற்பட்டது. அதற்காக அவர் முதலில் செய்யவேண்டியது,
(1) தரவுகளைத் திரட்டுதல் ஆகும்.
(2) தரவுப் பகுப்பாய்வு செய்தல் ஆகும்.
(3) நோக்கங்களை இனங்காணல் ஆகும்.
(4) மாதிரியொன்றைத் தெரிவு செய்தல் ஆகும்.
(5) தரவுகளைத் திரட்டும் முறையினை தயார்செய்தல் ஆகும்.

- கீழே தரப்பட்ட வரைபடத்தை 27 முதல் 28 வரையான வினாக்களுக்கு விடையளிக்கப் பயன்படுத்துக.




27. தொடர்பாடல் மாதிரியொன்றில் உள்ளடங்கும் விடயங்களை மேலுள்ள வரைபடம் காட்டுகின்றது. அதில் A, B மற்றும் C ஆகியவற்றைக் குறித்து நிற்கும் விடயங்கள் முறையே,
(1) குறிமுறையாக்குபவர், குறிமுறையவிழ்ப்பவர், பின்னூட்டம்.
(2) தொடர்பாடுநர், செய்தி, ஊடகவழி.
(3) குறிமுறையவிழ்ப்பவர், பின்னூட்டம், தொடர்பாடுநர்.
(4) குறிமுறையாக்குபவர், பெறுநர், செய்தி.
(5) குறிமுறையாக்குபவர், செய்தி, குறிமுறையவிழ்ப்பவர்.

28. மேற்படி வரைபடத்தின்படி, A, B மற்றும் C ஆகியவற்றுக்கு இடையில் இடம்பெறும் செயன்முறையின் பிரகாரம்,
J - ஒரு நேர்வழித் தொடர்பாடல் இடம்பெறுவது காணக்கிடைக்கின்றது.
K - பின்னூட்டம் பெறப்பட்டது தெளிவாகின்றது.
L - ஏதாவது இடையூறு அங்கிருப்பது தொடர்பில் உணரப்படக்கூடியதாகின்றது.
M - செய்தி எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.
இவற்றில் உண்மையான கூற்றுகள்,

(1) J, K ஆகியன மாத்திரம். (2) K, L ஆகியன மாத்திரம். (3) L, M ஆகியன மாத்திரம்.
(4) J, K, L ஆகியன மாத்திரம். (5) K, L, M ஆகியன மாத்திரம்.

29. திரைப்படமொன்றை திரையிடுவதற்கு முன்பதாக அதனைத் தணிக்கை செய்வது,
(1) பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை ஆகும்.
(2) தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஆகும்.
(3) கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகும்.
(4) தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனம் ஆகும்.
(5) வெகுசன ஊடக அமைச்சு ஆகும்.

30. 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பு யாப்பில் 14 (1) (அ) உறுப்புரை மூலமாக ஒவ்வொரு பிரஜையினதும்,
A - தகவலை மதிப்பிடும் உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.
B - பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுகிறது.
C - தகவல் பெற்றுக்கொள்ளும் உரிமை வெளிப்படுத்தப்படுகிறது.
D - வெளியீட்டு உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.
E - ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுகிறது.

மேற்காணும் கூற்றுகளில் உண்மையாவது,
(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) C மாத்திரம்.
(4) A, B , C ஆகியன மாத்திரம். (5) C, D, E ஆகியன மாத்திரம்.

31. பஸ் வண்டியில் பயணித்துக்கொண்டிருந்தபோது அருகில் அமர்ந்திருந்த நபர் கேட்கும் கேள்விகளுக்கு பதில்கூறிக்கொண்டிருப்பது ரவிக்குத் தொந்தரவாக இருந்தது. தனது கைத்தொலைபேசிக்குக் காதுகேள் பொறியை (earphone) இணைத்த ரவி வானொலியில் ஒலிபரப்பாகிய பாடலொன்றை செவிமடுக்கத் தொடங்கினான்.
இது வெகுசனத் தொடர்பாடலில் எப் பயனாகக் கருதப்படுகிறது?
(1) மீள் ஒழுங்குபடுத்தல் (Deregulation).
(2) சமூகமயமாதல் (Socialization).
(3) சமூகப் பயன்பாடு (Social Utility).
(4) மீளப்பெறுதல் (Withdrawal)
(5) திசை திருப்புதல் (Diversion).

32. கீழே தரப்படுவன பொதுமக்கள் தொடர்பு பற்றியதும் அதனோடு இணைந்த செயற்பாடுகள் தொடர்பானதுமான சோடி கூற்றுகள் சிலவாகும்.

A i. ஊடக பொதுமக்கள் தொடர்பு
ii. அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்.

B i. தொழில்சார் பொதுமக்கள் தொடர்பு.
ii. ஆய்வு மற்றும் அறிவு.

C i. நிறுவன பொதுமக்கள் தொடர்பு.
ii. அரச உறவுகள்.

D i. அரச பொதுமக்கள் தொடர்பு.
ii. ஒழுக்கக் கோவை.

மேற்படி கூற்றுகளில் மிகவும் நெருக்கமான தொடர்பினைக் காட்டும் சோடிகளைக் கொண்ட தெரிவு,
(1) A மற்றும் B ஆகும். (2) B மற்றும் C ஆகும்.
(3) A, B மற்றும் C ஆகும். (4) B, C மற்றும் D ஆகும்.
(5) A, B, C, D ஆகிய அனைத்தும் ஆகும்.

33. ஊடக மொழிப் பாவனை பற்றிய தவறான கூற்றைத் தெரிவு செய்க,
(1) ஊடகத்தில் பயன்படுத்தப்படும் மொழியின் மூலமாகப் பெறுநரது உளவியல் நிலைமைகளை விருத்தி செய்யலாம்.
(2) ஊடகத்தில் பயன்படுத்தப்படும் மொழியின் மூலமாக சில வேளைகளில் பெறுநர்கள் இலக்கினைத் தொலைத்து விடுவார்கள்.
(3) வாய்மொழியின் பல்வகைமையானது கட்புல ஊடகங்களின் எதிர்பார்ப்பைத் துரிதப்படுத்தும்.
(4) புதிய ஊடகங்களில் பயன்படுத்தப்படும் மொழி அச்சு ஊடக மொழி போல் தரநிலையுடன் காணப்படாது.
(5) வானொலி ஊடகத்தில் விவரணரீதியான பந்திகளைத் தவிர்ப்பது உசிதமானது.

34. தொடர்பாடல் செயற்பாட்டில் "மீள் ஒழுங்குபடுத்தல்" பற்றிய பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.
(1) செய்திப் பத்திரிகை அச்சுக் கடதாசிக்கு வரி அறவிடுதல்.
(2) செய்திப் பத்திரிகை பதிவு செய்யப்படுவதை கட்டாயமாக்குதல்.
(3) தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு இடையிலான போட்டியை இல்லாதொழித்தல்.
(4) செய்தி இணையத்தள அனுமதிப்பத்திரத்தை இற்றைப்படுத்தல்.
(5) ஊடக நிறுவனங்களுக்கு இலாபம் ஈட்டும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல்.

35. பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி வினாவுக்கு விடையளிக்குக.

| | X | Y |
|---|---|---|
| A | சுயநிர்ணயம் | தனிப்பட்ட சுதந்திரம் |
| B | ஊடக நுகர்வு | பெறுநர் சுட்டி |
| C | தேவை நிமித்தம் | சுகாதார சேவைகள் |
| D | சிறுகூறுகளாக்குதல் | பரந்த பெறுநர்கூட்டம் |

மேற்படி அட்டவணையில் X நிறுவப்படும்போது Y யின் அதிகரிப்பானது பாதிக்கப்படுவது,
(1) A, B ஆகியவற்றில்.
(2) A, C ஆகியவற்றில்.
(3) B, C ஆகியவற்றில்.
(4) B, D ஆகியவற்றில்.
(5) C, D ஆகியவற்றில்.

36. தொலைக்காட்சியில் நாடகம் ஒன்று ஒளிபரப்பாகி முடிவடைந்ததன் பின்னர் ஒரு வியாபாரியினால் அது திருட்டுத்தனமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை அம்பலமாகியது. இது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகத் தெளிவாகக் குறிப்பிடப்படுவது,
(1) தகவலறியும் உரிமைச் சட்டத்தில் ஆகும்.
(2) புலமைச் சொத்துச் சட்டத்தில் ஆகும்.
(3) மனித உரிமைகள் சட்டத்தில் ஆகும்.
(4) தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் ஆகும்.
(5) திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் ஆகும்.

37. ஏதேனும் ஒரு நிகழ்நிலைத் தரவுத் தளத்தினூடாக வெவ்வேறு தகவல் மூலங்களுக்குள் பிரவேசிக்க முடியுமாயிருப்பதைக் குறிப்பிடும் சொல் எது?
(1) எண்ணிமப்படுத்தல் (Digitalization).
(2) வலையமைப்பாதல் (Networking).
(3) இடைத்தொடர்பு (Interactivity).
(4) மீயுரை (Hypertexuality).
(5) தானியங்கி (Automation).

- வகுப்பு மாணவர்களது ஊடக பாவனை பற்றி நிகழ்த்தப்பட்ட ஆய்வின் தரவுத் தொகுதியொன்று கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்படுகிறது. 38 ஆம் 39 ஆம் வினாக்களுக்கு இவ்வட்டவணையைப் பயன்படுத்தி விடையளிக்குக.

| | வெகுசன ஊடகங்கள் மட்டும் | சமூக ஊடகங்கள் மட்டும் | வெகுசன ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் |
|---|---|---|---|
| ஆண் | 10 | 20 | 30 |
| பெண் | 08 | 12 | 20 |

38. மேற்படி தரவுத் தொகுதிக்கு ஏற்ப, ஆண் மாணவர்களது ஊடக பாவனையுடன் தொடர்புடைய ஆகாரம் மற்றும் இடையம் என்பன முறையே,
(1) 10, 20 (2) 20, 10 (3) 20, 30 (4) 30, 10 (5) 30, 20

39. ஆண, பெண் பிள்ளைகள் வெகுசன ஊடகம் மற்றும் சமூக ஊடகம் ஆகிய இரு ஊடகங்களையும் பயன்படுத்தும் சதவீதம் முறையே,
(1) 20%, 30% (2) 30%, 20% (3) 30%, 60%
(4) 40%, 60% (5) 60%, 40%

40. வானொலி, குரலை மையமாகக் கொண்ட ஊடகமாகும். இதில் மனிதக் குரலோடு சேரும் ஏனைய காரணிகளாக அமைவன,
   (1) இசை, விலங்குகளின் ஒலி, ஒலிப் பிரயோகங்கள் மற்றும் நிசப்தம்.
   (2) இசை, நிசப்தம், விலங்குகளின் ஒலி மற்றும் இயற்கையான ஒலி.
   (3) இயற்கையான ஒலி, உருவக ஒலி, ஒலிப் பிரயோகங்கள் மற்றும் நிசப்தம்.
   (4) உருவக ஒலி, இசை, நிசப்தம் மற்றும் ஒலிப் பிரயோகங்கள்.
   (5) இயற்கையான ஒலி, ஒலிப் பிரயோகங்கள், இசை மற்றும் நிசப்தம்.

41. "ஊடக ஆய்வு" என்பது,
   (1) ஊடகம் பற்றிய பெறுநரது துலங்கல் எவ்வாறானது என்பதை ஆராய்தல்.
   (2) எவையேனும் அறிவுத் துறைசார்ந்த விடயங்களை மிகவும் அவதானமாக ஆராய்தல் அல்லது ஆய்வு செய்தல்.
   (3) பெறுநர் மத்தியில் ஏற்படுத்தப்படும் தாக்கம் எத்தகையது என்பதை ஆராய்தல்.
   (4) தகவல், தொடர்பாடுநர், ஊடகம், பெறுநர் மற்றும் தாக்கம் முதலான விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளல்.
   (5) ஊடகத்தின் புதிய போக்குகள், உள்ளடக்கம் மற்றும் தொடர்பாடல் பற்றி ஆராய்தல்.

42. பூகோளப் பண்பாடு பற்றி இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் மாணவர்களால் வகுப்பறையில் முன்வைக்கப்பட்டன.

சாமா: தொடர்பாடல் தொழினுட்பத்தின் துரித வளர்ச்சியோடு வெவ்வேறு நாடுகளின் தேசிய பண்பாடுகள் நெருங்கி வந்துள்ளன.

அமர்: பூகோளப் பண்பாடு, பாரம்பரிய வெகுசன மற்றும் தேசிய பண்பாட்டு வகைப்பாடுகளுக்கு ஒத்துள்ளது.

குமார்: சகல இனங்களும், பண்பாடுகளும் ஒத்ததன்மையாயிருத்தல் சமகால பூகோளச் சிக்கலாகும்.

தேவி: பூகோளப் பண்பாடு உலகளாவிய தேசிய இனப் பண்பாடுகளை இல்லாதொழிக்கும்.

மேற்காணும் கூற்றுகளில் சரியான கூற்றுகளை முன்வைத்தவர்கள்,
   (1) சாமா, அமர் மற்றும் தேவி ஆகும்.
   (2) சாமா, அமர் மற்றும் குமார் ஆகும்.
   (3) சாமா, குமார் மற்றும் தேவி ஆகும்.
   (4) அமர், குமார் மற்றும் தேவி ஆகும்.
   (5) அமர், சாமா மற்றும் தேவி ஆகும்.

43. தமது பாடசாலை பற்றிய விவரணப் படமொன்றை ஒளிப்பதிவு செய்யும்போது ஒளிப்படங்களை ஒழுங்கமைக்கும் விதம் பற்றிய மாணவர்களது உரையாடலின்போது கீழ்க்காணும் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

A - முழு பாடசாலையும் தென்படும் வண்ணம் பாடசாலையின் முற்பக்கத் தோற்றம் ஒளிப்பதிவு செய்யப்படவேண்டும்.

B - வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் ஆசிரியரது உருவம் வகுப்பறையின் பின்னணியுடன் காட்டப்படவேண்டும்.

C - அதிபரது முன்வைப்பின்போது அவரது முகபாவங்கள் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.

D - திரைப்படத்தின் இறுதிக் காட்சியாக பாடசாலையின் சின்னம் காட்டப்படவேண்டும்.

மேற்காணுபவற்றை ஒளிப்பதிவு செய்யும்போது மிகவும் பொருத்தமான பட ஒழுங்குமுறையாக அமைவது,
   (1) நீள் எடுப்பு, இடைநிலை எடுப்பு, நெடுந்தொலை எடுப்பு, அண்மைநிலை எடுப்பு.
   (2) நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு, இடைநிலை எடுப்பு, நெடுந்தொலை எடுப்பு.
   (3) நெடுந்தொலை எடுப்பு, இடைநிலை எடுப்பு, நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு.
   (4) நெடுந்தொலை எடுப்பு, நீள் எடுப்பு, மிகு அண்மைநிலை எடுப்பு, அண்மைநிலை எடுப்பு.
   (5) மிகு நெடுந்தொலை எடுப்பு, நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு, மிகு அண்மைநிலை எடுப்பு.

44. ஆய்வு ஒழுக்கநெறிகள் பற்றிய இரண்டு கூற்றுகள் கீழே காணப்படுகின்றன.

A - தரவுகளைப் பெற்றுக்கொள்ளும்போது ஆய்வாளர் தனது அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தாமை.

B -விரும்பிய நேரத்தில் தரவு வழங்குநர் ஆய்வுச் செயன்முறையினின்று விலக அனுமதி அளித்தல்.

இக் கூற்றுகளில்,

(1) A உண்மையாவதோடு B பொய்யாகும்.
(2) A பொய்யாவதோடு B உண்மையாகும்.
(3) A மற்றும் B ஆகிய இரு கூற்றுகளும் பொய்யானவையாகும்.
(4) A மற்றும் B ஆகிய இரு கூற்றுகளும் உண்மையாவதோடு A மூலம் B உறுதிப்படுத்தப்படுகிறது.
(5) A மற்றும் B ஆகிய இரு கூற்றுகளும் உண்மையாவதோடு B மூலம் A உறுதிப்படுத்தப்படுகிறது.

45. கீழ்க்காணும் A,B,C,D ஆகிய சோடிச் சந்தர்ப்பங்களை உள்வாங்கி விடையளிக்குக.

A - சிந்தனைக் கிளர்வு - பிரச்சினையை இனங்காணல்.
B - நோக்கத்தை இனங்காணல் - முடிவுகளை எடுத்தல்.
C - தரவுகளைத் திரட்டல் - அறிக்கை எழுதுதல்.
D - முடிவுகளை எடுத்தல் - அறிக்கை எழுதுதல்.

ஒவ்வொரு சோடியிலும் காணப்படும் விடய உள்ளடக்கங்கள் இடையே மிகவும் நெருங்கிய தொடர்பைக் காட்டுவன,

(1) A மற்றும் B ஆகும். (2) A மற்றும் C ஆகும். (3) A மற்றும் D ஆகும்.
(4) B மற்றும் C ஆகும். (5) C மற்றும் D ஆகும்.

46. வெவ்வேறு நிறுவனங்களைப் பற்றிய சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| A : இலங்கைப் பத்திரிகைப் பேரவை | 1 : ஜனாதிபதி தலைவரையும் பணிப்பாளர் சபையையும் நியமிப்பார். |
| B : இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு | 2 : விடயத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் உறுப்பினர்களை நியமிப்பார். |
| C : பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை | 3 : வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த புத்திஜீவிகளைக் கொண்டதாக இச்சபை அமையும். |
| D : இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு | 4 : அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தமது உத்தியோகபூர்வ அதிகாரத்தின்கீழ் பணிப்பாளர் சபையின் உறுப்பினராவார். |

இவற்றுள், நிறுவனங்களிற்கும் பதவி நிலைகளுக்குமான சரியான தொடர்பைக் காட்டும் தெரிவு,

(1) A1, B2, C3, D4 (2) A2, B1, C3, D4 (3) A3, B2, C4, D1
(4) A1, B3, C2, D4 (5) A4, B3, C2, D1

47. பாடசாலை ஊடக அலகினால் பிரசுரிக்கப்படும் வார சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் சில கீழ்வருமாறு:

A - விமர்சனரீதியான ஊடக நுகர்வு
ஊடக ஒழுக்கநெறிகள் பற்றிய அறிவு

B - ஊடகக் கொள்கைகள் குழு ஒன்றை நியமித்தல்
ஊடக ஒழுங்குபடுத்தல்

C - தகவல் பெற்றுக்கொள்ளுதல் பற்றிய அறிவு
சிறந்த பிரஜையாக அபிவிருத்திக்கு துணைபுரிதல்

D - சந்தர்ப்பத்திற்கு உகந்த மொழிப் பாவனை
. படைப்பாக்கரீதியான திறன் விருத்தி

மேற்காணும் விடயங்களில் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் பாடத்தைக் கற்பதன் தேவை பற்றிய இழிவளவான முக்கியத்துவத்தைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) A, C ஆகியன மாத்திரம்.
(4) B, D ஆகியன மாத்திரம். (5) C, D ஆகியன மாத்திரம்.

48. வெகுசன ஊடகப் பெறுநர்கள் ஐவரது ஊடகப் பாவனை பற்றிய தகவல் கீழே காணப்படுகிறது.

A. செய்திப் பத்திரிகைகள் மீதான பார்வையை முன்வைக்கும் காலைநேரத் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு நகரத்திற்குச் சென்று பத்திரிகை வாங்குவார்.

B. கைத்தொலைபேசியில் காலைநேர வானொலி செய்தி அறிக்கையைச் செவிமடுத்துவிட்டு, பெற்றுக்கொண்ட செய்திக் குறுந்தகவல்களை (News Alerts) வாசிப்பார்.

C. அலுவலகத்திற்குச் செல்லும்போது திறன் தொலைபேசி (Smart Phone) மூலம் செய்தி இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களுக்குள் பிரவேசிப்பார்.

D. இரவு உறங்குவதற்கு முன்னர் தொலைக்காட்சிச் செய்தி மற்றும் வானொலிச் செய்திகளை இணையத்தளங்களில் ஆராய்ந்து, செய்திப் பத்திரிகை இணையத்தளங்களை சமூக ஊடகங்கள் மூலம் வாசிப்பார்.

E. YouTube மூலம் திரைப்படம் ஒன்றைப் பார்த்து முகநூல் மூலம் அது தொடர்பான செய்திகளை வாசிப்பார்.

மேற்காணும் பெறுநர்களில் ஊடகக் குவிகையுடன் மிகவும் நெருக்கமுடைய பெறுநர் குழுவில் இடம்பெறுவோர்,

(1) A, B, C மற்றும் E ஆகியோர்.
(2) A, C, D மற்றும் E ஆகியோர்.
(3) B, C, D மற்றும் E ஆகியோர்.
(4) B, D மற்றும் E ஆகியோர்.
(5) C, D மற்றும் E ஆகியோர்.

49. முரண்பாடொன்றுக்கான தீர்வொன்றில் நீங்கள் தலையிடவேண்டி இருந்ததாகக் கற்பனை செய்துகொள்க. முரண்பாட்டின் தன்மையைப் புரிந்துகொண்டதன் பின்னர், நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய மிகப்பொருத்தமான அடுத்த படிமுறை,

(1) எதிர்த்தரப்புகளுடன் தொடர்பாடுதல்.
(2) மிகப்பொருத்தமான தீர்வினைத் தெரிவுசெய்தல்.
(3) மூன்றாம் தரப்பொன்றின் ஈடுபாட்டைப் பெறுதல்.
(4) முன்மொழிவுகளை முன்வைத்தல்.
(5) முரண்பாட்டுக்கான மாற்று வழிமுறைகளை அடையாளங்காணுதல்.

50. பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற்கொள்க.

| | | |
|---|---|---|
| A : மக்பிறைட் அறிக்கை | - | ஒரு நாட்டில், சமத்துவமின்மைகளை வேரறுப்பதற்காகத் தொடர்பாடல் கொள்கைகள் தயாரிக்கப்படவேண்டும். |
| B : சமஷ்டி தொடர்பாடல் ஆணைக்குழு | - | காலனித்துவ நாடுகளில் வானொலி ஊடகத்தைக் கையாள்வதற்கான கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. |
| C : சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் | - | தனக்கென அபிப்பிராயத்தை வைத்திருக்கும் சுதந்திரம் மற்றும் வெளியிடும் உரிமை ஒருவருக்கு உண்டு. |

மேலுள்ள கூற்றுகளுள் நேரடித் தொடர்பைக் காட்டும் சோடி/ சோடிகள் காணப்படும் தெரிவு,

(1) A மாத்திரம். (2) B மாத்திரம். (3) A, B ஆகியன மாத்திரம்.
(4) A, C ஆகியன மாத்திரம். (5) B, C ஆகியன மாத்திரம்.

## வினாத்தாள் II

01. (i) வாய்மொழித் தொடர்பாடலுக்குரிய பணிகள் **நான்கைப்** பெயரிடுக. **(04 புள்ளிகள்)**

(ii) (a) பொதுசனத் தொடர்பாடலின் பயன்கள் **நான்கைக்** குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(b) அவற்றுள் ஒன்றைப் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. **(04 புள்ளிகள்)**

(iii) ஒஸ்குட் - ஷ்ராம் மாதிரியின் விசேட இயல்புகள் **மூன்றை** விளக்குக. **(12 புள்ளிகள்)**

(iv) வெகுசன ஊடகங்களின் பணிகள் **நான்கை** அடிப்படையாகக் கொண்டு அவை தற்கால வெகுசன ஊடகங்களில் பயன்படுத்தப்படும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக. **(16 புள்ளிகள்)**

02. அமெரிக்காவிலிருந்து பேராசிரியர் விமல் திசாநாயக்க அவர்கள் "தொடர்பாடல் ஊடகக் கற்கைகள் மற்றும் அதன் போக்குகள்" எனும் தலைப்பில் நடாத்திய விரிவுரையில் இணையத்தளம் ஊடாக நேரடியாகப் பங்குபற்றும் சந்தர்ப்பம் இந்நாட்டு மாணவர்களுக்குக் கிட்டியது.

(i) மேற்குறித்த மெய்நிகர் தொடர்பாடல் வகைக்கு உரித்தான பண்புகள் **நான்கைக்** குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(ii) அப்பண்புகளுள் **இரண்டை** மேற்தரப்பட்ட சந்தர்ப்பத்திற்கேற்ப சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

(iii) கல்விச் செயற்பாட்டிற்காகக் கட்புலத் தொடர்பாடலைப் பயன்படுத்தக்கூடிய முறைகள் **மூன்றை** விவரிக்குக. **(12 புள்ளிகள்)**

(iv) பூகோளமயமாதல் காரணமாக ஊடகத் துறையில் ஏற்பட்டுள்ள புதிய போக்குகள் **நான்கை** உதாரணங்களுடன் கலந்துரையாடுக. **(16 புள்ளிகள்)**

03. சமூக ஊடகங்கள் மூலமாக ஒன்றிணைந்த இளைஞர் யுவதிகள் நாட்டை அலங்கரிக்கும் உன்னத நோக்குடன் நகரச் சுவர்களில் ஓவியங்கள் வரைந்து அழகுபடுத்தினர்.

(i) சமூக ஊடகங்களின் உள்ளீடுகள் / பிரயோகங்கள் (Apps) **இரண்டைப்** பெயரிடுக. **(04 புள்ளிகள்)**

(ii) நகரை அலங்கரிக்கும் ஓவியங்களில் நவீன ஓவியங்களைப்போலவே பாரம்பரிய ஓவியங்களையும் காணக்கூடியதாயுள்ளது. அத்தகைய பாரம்பரிய ஓவியங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய நாட்டார் கலைகள் **இரண்டினை** உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

(iii). நாட்டார் வாழ்வியலின் ரிதம் நாட்டார் கவிதைகளில் உள்ளார்ந்து காணப்படுகின்றது. நாட்டார் கவிதைகளில் காணப்படுகின்ற தொடர்பாடல் பண்புகள் **இரண்டை** விவரிக்குக. **(12 புள்ளிகள்)**

(iv) சமூகம் மற்றும் பண்பாட்டில் வெகுசன ஊடகங்களைவிட சமூக ஊடகங்கள் அதிக தாக்கத்தைச் செலுத்துகின்றன. இதற்குச் சார்பாக அல்லது எதிராக **நான்கு** காரணிகளுக்கு ஊடாகக் கலந்துரையாடுக. **(16 புள்ளிகள்)**

04. வெகுசன ஊடகம் பற்றிய கற்கைகளின்போது, தற்கால உலகின் ஊடகப் போக்குகள் குறித்த அறிவு அவசியமானது.

(i) விமர்சனரீதியான பெறுநரொருவர் கொண்டிருக்க வேண்டிய திறன்கள் **நான்கைப்** பெயரிடுக. **(04 புள்ளிகள்)**

(ii) பயன்பாடு மற்றும் பாவனையை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் ஊடகப் போக்குகள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

(iii) உலகில் ஊடக ஒழுங்குமுறைப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் அடிப்படை அணுகுமுறைகள் **மூன்றினை** விவரிக்குக. **(12 புள்ளிகள்)**

(iv) ஊடகக் குவிகை காரணமாக வெகுசன ஊடகங்கள் மற்றும் அவற்றின் பெறுநர்களின் இயல்புகள் மாற்றமடைந்துள்ள விதத்தினை **நான்கு** காரணிகளுக்கு ஊடாக ஆராய்க. **(16 புள்ளிகள்)**

05. “படைப்பாற்றல் மற்றும் தொடர்பாடலுக்கு இடையே காணப்படுவது வேறுபிரித்திட முடியாத உறவு ஆகும்”.

(i) தொடர்பாடலில் படைப்பாற்றல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டினைச்** சுருக்கமாகக் குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(ii) பிரதான திரைப்பட வகைப்பாடுகள் **நான்கைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

(iii) புராதன மானுடச் சமூகத்தில் பொதுமக்கள் தொடர்பைப் பேணுவதற்காகப் பயன்படுத்திய படைப்பாக்கப்பூர்வமான முறைகள் **மூன்றினை** உதாரணங்களுக்கூடாக விளக்குக. **(12 புள்ளிகள்)**

(iv) (a) உமது பாடசாலையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைத் தயாரிக்கும் பணி உமக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் முதற் பக்கத்தில் (Home page) உள்ளடக்கப்படும் விடயங்கள் **நான்கைக்** குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

(b) அவ்விடயங்களை உமது பாடசாலையின் தனித்துவத்தைக் காட்டும் வண்ணம் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுக. **(12 புள்ளிகள்)**

06. பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியினை வெற்றிகரமானதொன்றாக நடாத்த பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகள், ஊடக அதிகாரிகள் மற்றும் நிகழ்வு முகாமையாளர்கள் ஆகியோரின் பங்களிப்பு முக்கியமானதென அதிபர் வலியுறுத்தினார்.

(i) நிறுவனம் என்ற வகையில் பாடசாலையொன்றுக்கு பொதுமக்கள் தொடர்பு தேவைப்படும் சந்தர்ப்பங்கள் **நான்கினைப்** பெயரிடுக. **(04 புள்ளிகள்)**

(ii) பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி அவசியம் பயன்படுத்தவேண்டிய திறன்கள் **இரண்டினை** விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

(iii) விளையாட்டுப் போட்டியை பிரபல்யப்படுத்துவதில் ஊடக அதிகாரியொருவரால் நிறைவேற்றப்படவேண்டிய பணிகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விளக்குக. **(12 புள்ளிகள்)**

(iv) விளையாட்டுப் போட்டியில் நிகழ்வு முகாமைத்துவத்திற்கான திட்டத்தில் பின்வரும் அம்சங்களை விளக்குக.

(a) நிகழ்விடம்.
(b) நிகழ்ச்சி நிரல்.
(c) அழைக்கப்படுபவர்களைத் தீர்மானித்தல்.
(d) இடர் மதிப்பீடு. **(16 புள்ளிகள்)**

07. அபிவிருத்திக்காகத் தொடர்பாடலைப் பயன்படுத்தும்போது, வெகுசன ஊடகத் தகவல்கள் பற்றிய மக்களது கருத்துகளை அறிந்து செயல்படுதல் அவசியமானது.

(i) ஐக்கிய நாடுகளின் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட இடைத் தொடர்பு விருத்திக்கான தொடர்பாடல் பிரவேசங்கள் **நான்கினைப்** பெயரிடுக. **(04 புள்ளிகள்)**

(ii) பிரசித்த பண்பாட்டின் பண்புகள் **இரண்டினை** உதாரணங்களுடன் சுருக்கமாக விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

(iii) ஊடக ஒழுங்குபடுத்தலுடன் தொடர்புபட்ட இலங்கை நிறுவனங்கள் **நான்கைப்** பெயரிட்டு அவற்றுள் **இரண்டினை** விவரிக்குக. **(12 புள்ளிகள்)**

(iv) வெகுசன ஊடகங்களில் அறிக்கையிடப்படும் வன்முறை பற்றிய பெறுநரது மனப்பாங்கை ஆராயும் ஆய்வுச் செயன்முறையொன்றில் தரவு சேகரிப்பதற்காகப் பயன்படுத்தக்கூடிய முறைகள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. **(16 புள்ளிகள்)**

* * *